**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, B.N.S.S)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.280/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 3 |
| Name | : | முத்துராமலிங்கம், வயது 58 |
| Father Name/Husband Name | : | சூடாமணி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தீக்குச்சி கம்பெனி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of February 2026.

**(A1 present. A2, A9, A10 absent. 355 BNSS petition filed and allowed.)**

<u>**முதல் விசாரணை**</u>

1 நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து தீக்குச்சி கம்பெனி வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது மருமகன் முருகன் ஆவார். ஆஜர் இல்லாத மற்ற எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 03.06.2011 ஆம் தேதி இனாம்மணியாச்சியில் உள்ள தாமரை மஹாலில் எனது மகள் மந்திரலட்சுமிக்கும், எனது மருமகன் முருகன் என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது. எனது மகள் ஒப்பந்த அடிப்படையில் கடலூரில் அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வந்தார். எனது மருமகன் எலெக்ட்ரிசனாக குவைத்தில் பணிபுரிந்து வந்தார். திருமணம் நடைபெற்ற பின்பு கடலூர் மாவட்டத்தில் உள்ள புதுசத்திரத்தில் எனது மகளும், மருமகனும் குடிபெயர்ந்தார்கள்.

2 திருமணம் முடித்து ஒரு மாதம் கழித்து எனது மருமகன் மீண்டும் வெளிநாடு சென்று விட்டார். பின்னர் ஒரு மாதம் கழித்து வெளிநாட்டிலிருந்து திரும்ப ஊருக்கு வந்துவிட்டார். எனது மகளுடன் கடலூரில் வாழ்க்கை தொடங்கினார். பின்னர் எனது மகள் அந்த சமயத்தில் கர்ப்பமாக இருந்தார். பின்னர் எனது மருமகன் வெறும்பய வீட்டில் நான் பெண் எடுத்துவிட்டேன். எனக்கு எங்கிருந்தோ எல்லாம் பெண் கொடுப்பதற்கு தயராக இருந்தார்கள் அதை எல்லாம் விட்டுவிட்டு உன்னை கல்யாணம் பன்னிவிட்டேன் என்று எனது மகளை பார்த்து மருமகன் கூறினார்.

3 பின்னர் பிரசவத்திற்காக எனது வீட்டிற்கு எனது மகள் கோவில்பட்டிக்கு வந்தபோது எனது சம்பந்தகாரர் சுப்பையா, சம்பந்தி வெயிலம்மாள் இருவரும் சேர்ந்து என் பிள்ளைக்கு எங்கிருந்தோ எல்லாம் பெண் கேட்டு வந்தார்கள் அவர்களை எல்லாம் விட்டுவிட்டு வெறும்பயல் வீட்டில் நான் பெண் எடுத்து உள்ளேன் என்று எங்களை பார்த்து கூறினார். பின்னர் 23.09.2012 ஆம் தேதி கோவில்பட்டியில் உள்ள லதா மருத்துவமனையில் எனது மகளுக்கு பெண் குழந்தை பிறந்தது. பின்னர் லதா மருத்துவமனையில் எனது மருமகனுக்கு முத்துலட்சுமி (எ) லஷ்மி (எ) சுதா என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு எனது மருமகனுக்கு அடிக்கடி போன் வந்தது.

4 பின்னர் எனது மகள் எனது மருமகனிடம் ஏன் அவ்வாறு முத்துலட்சுமியிடம் பேசுகிறீர்கள் என்று கண்டித்துள்ளார். பின்னர் 2014 ஆம் வருடம் கோவில்பட்டி, சார்பு நீதிமன்றத்திலிருந்து எனது மகளுக்கு விவாகரத்து மனு வந்தது. பின்னர் நாங்கள் விவகாரத்து வழக்கை எதிர்த்து நடத்தினோம். பின்னர் 2015 ல் விவாகரத்து வழக்கை திரும்பெறுகிறேன் என்று எங்களுடைய வழக்கறிஞரிடம் தனது மருமகன் கூறியுள்ளார். பின்னர் நாங்களும் சிறிது காலம் wait பண்ணும்போது எனது மருமகன் மகளுடன் சேர்ந்து வாழ்வார் என்று நினைத்திருந்தோம். முத்துலட்சுமி என்ற பெண்ணும் கோவில்பட்டியில் இல்லை. எனது மருமகனும் கோவில்பட்டியில் இல்லை. பின்னர் நான் எனது மருமகன் அண்ணன் மனைவி ரேவதி வீட்டிற்கு சென்று இதுகுறித்து 10.05.2015 ஆம் தேதி கேட்டபோது எனது மருமகன், முத்துலட்சுமி என்பவரை திருமணம் செய்துவிட்டார் என்று என்னிடம் கூறினார்.

5 எங்கள் தெருவில் உள்ள ஜவுளி வியாபாரம் செய்துவந்த சிங்கராணி என்பவரும் எனது மருமகனும் மற்றும் முத்துலட்சுமியின் திருமணத்தை பார்த்தார்கள் என்று என்னிடம் கூறினார்கள். பின்னர் 24.08.2017 ஆம் தேதி கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நாங்கள் புகார் செய்தோம். பின்னர் போலீசார் விசாரணையில் எனது சம்பந்தி சுப்பையா, வெயிலம்மாள் மற்றும் எனது மருமகன் அண்ணன் அழகு சுப்வு ஆகியோர்கள் காவல் நிலையத்திற்கு வந்தார்கள். பின்னர் போலீசாரிடம் எனது சம்பந்தி சுப்பையாவும், எனது மருமகன் அண்ணன் அழகு சுப்புவும், எனது மருமகன் முருகன் வெளிநாட்டில்தான் இருக்கிறார் என்று போலீசாரிடம் கூறினார்கள். பின்னர் நாங்கள் மாண்புமிகு உயர் நீதிமன்ற மதுரை கிளையில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தோம். அதில் எனது மருமகன் அங்கு ஆஜராகவில்லை. பின்னர் ரேவதி என்பவர் மூலம் முருகன் என்பவர் வெளிநாட்டிற்கு போகவில்லை என்று எங்களுக்கு தெரியவந்தது.

6 பின்னர் எனது மருமகனின் தங்கை வாணி, தங்கையின் கணவர் பெருமாள் ஆகியோர் சொந்த வீடு கட்டி கோயம்புத்தூரில் வசித்து வருகிறார்கள். பின்னர் எனது சொந்தகாரர்கள் மூலம் மேட்டுபாளையத்தில் உள்ள விஜயகுமார் என்பவர் தகவல் கொடுத்ததன் பேரில் எனது மருமகன் முருகனும், முத்துலட்சுமியும் குமரன் நகரில் வசித்து வருவதாக என்னிடம் சொன்னார். முருகனும், முத்துலட்சுமிக்கு பிறந்த பெண் குழந்தை மிருதுல்லா பெரிய நாயக்கம் பாளையத்தில் உள்ள G.K.T மெட்ரிக் பள்ளியில் இரண்டாம் வகுப்பு படித்து வருவதாக விஜயகுமார் எங்களிடம் கூறினார்.

7 பின்னர் 2024 ஆம் வருடம் நானும், எனது மகளும் கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது மருமகன் இரண்டாவது திருமணம் செய்துவிட்டார் என்று புகார் அளித்தோம். அந்த போலீசார் விசாரணையில் எனது மருமகன் முருகன் மட்டும் வந்தார். பின்னர் போலீசார் விசாரணையில் எனது மருமகன் எனக்கு மறுகல்யாணம் யார் கூடவும் நடக்கவில்லை என்று சொல்லி விட்டு போய்விட்டார். பின்னர் எனது மகள் நீதிமன்றத்தில் புகார் அளித்து அதன் பேரில் அனைத்து மகளிர் காவல் நிலையம் விசாரித்து பின்பு இந்த வழக்கை பதிவு செய்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>1,2,9,10 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

8. 1,2,9,10 வது திரிகள் தரப்பிற்கு குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்பதால் 1,2,9,10 வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.